udicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 233/2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 02 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. நவீன் குமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கமலக்கண்ணன் | தொழில் | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | வக்கணம்பட்டி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 32 |
| எதிரிகள் ஆஜர் | | | |
| | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 19th day of January 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.2 திரு. நவீன்குமார் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் பக்கத்து வீட்டுகாரர்கள். அ. சா. 1 என் மூத்த சகோதரர் ஆவார். கடந்த 03.12.2024 அன்று காலை 10.30-11 மணியளவில் என் வீட்டின் மேல் தழைகள் அதிகமாக சேர்ந்திருந்ததால் அதில் இருந்த குப்பைகளை சுத்தம் செய்து வெளியே கொட்டினேன். அவ்வாறு நான் வெளியே குப்பைபை கொட்டியதற்கு 1 ம் எதிரி பிரச்சனை செய்தார். மேலும் 1ம் எதிரி என்னை தேவிடியா பையா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார் பின்பு என் அண்ணன் அங்கு வந்து பேசி அனைவரும் சமதானமாக சென்று விட்டோம்.அன்று இரவு 8.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்த போது வீட்டிற்கு வெளியே சத்தம் கேட்டது. யார்

சத்தம் போடுகிறார்கள் என்று நான் சென்று பார்த்த போது ஆஜர் 1, 3 முதல் 5 எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு தேவிடியா பசங்களா வீட்டிற்கு வெளியே வாங்கடா என்று அசிங்கமா திட்டினார்கள். அப்போது பேசிகொண்டிருந்த போது 4, 5 எதிரிகள் ஒரு கட்டையால் அ.சா.1 யை வலது கையில் தாக்கினார்கள். பின்பு கேட்டை இழுத்து சாத்தினேன். பின்பு 4, 5 எதிரிகள் கடைப்பாறை எடுத்து வந்து எங்கள் வீட்டு கேட்டை உடைக்க முயற்சித்தார்கள். பின்பு போலீஸ் அவரச உதவி எண்ணான 100 க்கு போன் செய்து போலீசாரை வரவளைத்தேன். பின்பு சிகிச்சைக்காக அ.சா.1 திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். பின்பு காவல்நிலையம் சென்று இது தொடர்பாக அ.சா. 1 புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் இரண்டு கட்டைகளால் தான் எதிரிகள் அ.சா.1யை தாக்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupathur

Judicial Magistrate No.1,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 233/2025
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 01 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கிருபானந்தன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. கமலக்கண்ணன் | தொழில் | வியபாரம் |
| கிராமம் | வக்கணம்பட்டி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |
| எதிரிகள் ஆஜர் | | | |
| | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 19th day of January 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா.1 திரு. கிருபானந்தன் முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வியபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் பக்கத்து வீட்டுகாரர்கள். கடந்த 03.12.2024 அன்று காலை 10.30 மணியளவில் என் வீட்டில் பைப் அடைத்திருந்ததால் அதில் இருந்த குப்பைகளை சுத்தம் செய்து வெளியே கொட்டினேன். அவ்வாறு நான் வெளியே குப்பையை கொட்டியதற்கு 1 ம் எதிரி பிரச்சனை செய்தார். மேலும் 1ம் எதிரி என்னை தேவிடியா பையா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார். பின்பு நான் சமாதனமாக சென்று விடலாம் என்று விட்டுவிட்டேன். அன்று இரவு 8.30 மணியளவில் நான் என் வீட்டிற்குள் டிவி பார்த்துக்கொண்டு சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது மதுபோதையில் 3 முதல் 5 எதிரிகள் என்

வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து கட்டையால் என் வலது மணிக்கட்டில் தாக்கினார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். அப்போது என் வீட்டில் இருந்த என் தம்பி நவீன் குமார் எதற்கு வீட்டிற்குள் வந்தீர்கள் என்று கூறி வீட்டின் கேட்டை சாத்தினார். அப்போது காலையில் பிரச்சனையை பேசி முடித்துவிட்டேமே மீண்டும் ஏன் பிரச்சனை செய்கீறிற்கள் என்று கேட்டதற்கு 5ம் எதிரி கட்டையால் நவீன்குமாரின் முதுகில் தாக்கினார். பின்பு 4ம் எதிரி ஒரு கடைப்பாரையை எடுத்து வந்து என் வீட்டின் கேட்டை உடைத்து விட்டார். பின்பு போலீஸ் அவரச உதவி எண்ணாண 100 க்கு போன் செய்து போலீசாரை வரவழைத்தேன். பின்பு சிகிச்சைக்காக நான் மட்டும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்பு காவல்நிலையம் சென்று இது தொடர்பாக புகார் அளித்தேன். ( **என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் அ.சாஆ. 01 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** ) என்னிடம் காட்டப்படும் இரண்டு கட்டைககளால் தான் எதிரிகள் என்னை தாக்கினார்கள் ( **அந்த கட்டைகள் அ.சா.பொ. I, II ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** ) போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupathur

Judicial Magistrate No.1,
Tirupathur.